18.03.2024
அசல் வழக்கு எண்: 674/2010

வா.சா.2 சாட்சி சீதையம்மாள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது கணவர் பெயர் என்ன என்றால் கருத்தமாயன் ஆகும். அதிவீர ராமபாண்டியன் யார் என்றால் எனது கணவருக்கு சித்தப்பா மகன் ஆவார். எனது கணவரும், அதிவீரராமபாண்டியன் ஆகியோர்களும் இந்த வழக்கை 2010-ம் ஆண்டு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். எனது கணவரும் அதிவீரராமபாண்டியனும் 7ம் வாதி நாகஜோதி என்பவருக்கு தாவாச் சொத்தை கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான்.

தாவாச் சொத்து எத்தனை செண்டு என்றால் 55 செண்டு ஆகும். மேற்படி 55 செண்டில் எனது கணவருக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் பாதி பாத்தியம் ஆகும். இந்த வழக்கை எனது கணவர் தாக்கல் செய்வதற்கு முன்பாக 7ம் வாதிக்கு கிரையம் கொடுத்தாரா அல்லது பின்பாக கிரையம் கொடுத்தாரா என்றால் வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பாகவே கிரையம் கொடுத்துவிட்டார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக கிரையம் கொடுத்திருந்தால் மேற்படி சொத்தில் எனது கணவருக்கு அந்த சொத்தில் உரிமையில்லை என்றால் சரிதான். உரிமையில்லாத சொத்தில் எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் பக்கத்து காட்டைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய சொத்து என்று சொன்னார்கள் அதனால் நாங்களும் வழக்கு தாக்கல் செய்தோம்.

கடந்த 2012-ம் ஆண்டு 7ம் வாதி தாவாச் சொத்து சம்மந்தமாக 1ம் பிரதிவாதி மீது மற்றொரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கணவருக்கு தான் தெரியும். நீதிமன்றத்தில் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தது யார் என்றால் நாகஜோதி தான்

அழைத்தார். நாகஜோதி என்னை சாட்சியம் அளிக்க அழைத்தபோது 2012ம் ஆண்டு அவர் தாக்கல் செய்த வழக்கு சம்மந்தமாக சொல்லி தான் சாட்சியமளிக்க அழைத்தார் என்றால் சரிதான். நாகஜோதி தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடியாகி விட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 18.04.2023-ம் தேதி நாகஜோதி தாக்கல் செய்த வழக்கு இதே நீதிமன்றத்தில் முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடியாகி விட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

தாவாச் சொத்தை பிச்சைமணி ஆக்கிரமிப்பு செய்து சுவாதீனத்தை கொடுக்க மறுக்கிறார் என்றால் சரியல்ல. நாகஜோதி தான் விவசாயம் செய்கிறார். எனது கணவரும் அதிவீரராமபாண்டியனும் தாவாச் சொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர்களது அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்றும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது உண்மையா அல்லது எனது கணவர் பிராதில் சொல்லியுள்ளது உண்மையா என்றால் நான் சொல்வது தான் உண்மை.

தாவாச் சொத்தை சின்னசிவணான்டி என்பவருக்கு அசைன்மெண்ட் மூலமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சின்னசிவணான்டி என்பவருக்கு ஆண்டிச்சாமி மற்றும் சிவமாயத்தேவர் என்ற இரண்டு மக்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி நபர்கள் தாவாச் சொத்தை பொன்னுச்சாமித்தேவருக்கு ஒத்தி வைத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு மேற்படி நபர்கள் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

தாவாச் சொத்து எனது கணவருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் பூர்வீக பாத்தியப்பட்டது ஆகும். எனது மாமனார் பெயர் என்ன என்றால் அய்யாவுத்தேவர் ஆகும். தாவாச் சொத்து எனது கணவருக்கு தந்தை வழிச்

சொத்தா, தாய்வழிச் சொத்தா என்றால் தந்தை வழிச் சொத்து ஆகும். தாவாச் சொத்திற்கு அய்யாவுத்தேவர் பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

தாவாச் சொத்து சம்மந்தமாக வருவாய் அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவாச் சொத்திற்கு தற்போது யாருடைய பெயரில் பட்டா உள்ளது என்றால் எனது கணவர் பெயரில் உள்ளது. தாவாச் சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், மேற்படி விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும், 7ம் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

எனது கணவர் வழக்கு தாக்கல் செய்த போது 7ம் வாதியிடம் சொன்னாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.